# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 16 வியாழக்கிழமை (2-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 292


# புளியங்குளத்துக்கு வடக்கே படையினர்-புலிகள் மோதல்

## மழை காலம் ஆரம்பிக்கும் முன் துருப்புக்களை நகர்த்த முயற்சி

கொழும்பு, ஒக்டோபர் 2

மழை காலம் ஆரம்பிக்க முன் துருப்புக்களை புளியங்குளத்துக்கு வடக்கே மேலும் நகர்த்தும் முயற்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் ஈடுபட்ட போது விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் சமர் மூண்டது.

செவ்வாய் காலை 9 மணியளவில் இந்த மோதல் ஆரம்பமானது.

புலிகள் மோட்டார் மற்றும் சிறிய ஆயுதங்கள் சகிதம் படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர் என்றும் —

இந்த மோதல் ஒரு சில மணித்தியாலங்கள் நீடித்தது என்றும் —

படையினர் இதுவரை 16 புலிகளின் சடலங்களை மீட்டுள்ளனர் என்றும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

சுமார் 50 புலிகள் கொல்லப்பட்டும், பெரும் எண்ணிக்கையானவர்கள் காயமடைந்தும் உள்ளனர் என்றும் —

இந்த மோதலில் படையினர் தரப்பில் 19 படையினர் கொல்லப்பட்டும், 37 படையினர் காயம் அடைந்தும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இழப்புக்கள் குறித்து முரணான தகவல்கள்

வவுனியா, ஒக். 2

"வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கைத் துருப்பினருக்கும், புலிகளுக்கும் இடையில் புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்தவர்கள் குறித்து ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனிலிருந்து ஸ்கொட்டுக்கு தமிழர் பேரவை புரட்சிப் பயணம்

### பொதுநலவாய தலைவர்களை சந்திக்க ஏற்பாடு

லண்டன், ஒக். 2

லண்டனில் இயங்கும் "பொதுநலவாயம் 97க்கான தமிழர் பேரவை" என்னும் அமைப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி லண்டனில் இருந்து ஸ்கொட்லாந்துக்கு "நட்புறவு புரட்சிப் பயணம்" ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறது.

அந்த அமைப்பு இது தொடர்பாக நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மலர்ந்துவரும் ஸ்கொட்லாந்து தேசத்துக்கும், தமிழீழ தேசத்துக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அங்கு பொருள்கள் ஏற இங்கு விலைகள் இறங்கப் போகுது பாருங்கோ...!

## கப்பல் சேவை

காங்கேசன்துறையில் இருந்து மன்னாருக்கு பயணிகள் கப்பல் சேவை நாளை நடைபெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களை நாளை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சூட்டுக் காயத்துடன் இருவரின் சடலங்கள்

சுன்னாகம், உடுவில் வீதியில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக சுன்னாகம் பொலீஸாரால் இரண்டு இனந்தெரியாத இளைஞர்களின் சடலங்கள் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சுமார் 22, 25 வயதுள்ள மதிக்கத்தக்க இரு இளைஞர்களின் சடலங்களும், பிரேத பரிசோதனையின் பொருட்டும், மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன.

சடலங்களின் தலைப் பகுதிகளிலும், கை, மார்பிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. (இ-15)

### கீரிமலை மரணம் தொடர்பாக

## பிணையில் விடப்பட்ட சிப்பாய் மீண்டும் படையில் சேர்ந்து கைது

ஒருவரின் மரணம் தொடர்பாகக் கைதாகி பிணையில் விடப்பட்ட சிப்பாய் ஒருவர் தப்பி ஓடியோர் மீண்டும் படையில் சேர்ந்து கொள்ள வழங்கப்பட்டிருந்த சலுகையைப் பயன்படுத்தி மீண்டும் படையில் சேர்ந்த போதும் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் கைதாகி உள்ளார்.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## கப்பலில் பொருள் ஏற்றும் பணி மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 2

யாழ். மாவட்டத்துக்கு கப்பல் மூலம் பொருள்களை அனுப்பும் நடவடிக்கையை மீள ஆரம்பிப்பது என்று யாழ்ப்பாணத்துக்கு பொருள் அனுப்பும் வர்த்தகர்கள் முடிவு செய்ததைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் "ஓஷன் சக்ஸஸ்" என்னும் கப்பலில் பொருள்கள் ஏற்றும் பணி நேற்று ஆரம்பமானது.

யாழ் வர்த்தகர்களின் பொருள்களுடன் "அஸ்ரோறியா" கப்பல் கொழும்பில் மூழ்கியதையடுத்து வடக்குக்குக் கப்பல் மூலம் பொருள்கள் அனுப்பும் பணியை 14 நாள்களுக்கு இடை நிறுத்துவது என்று யாழ்ப்பாணத்துக்குப் பொருள் அனுப்பும் வர்த்தகர்கள் முடிவு செய்திருந்தது தெரிந்ததே.

இதனை அடுத்து இந்தக் கப்பலில் பொருள்கள் ஏற்றப்படாத நிலையில் கப்பல் கடந்த 26 ஆம் திகதி முதல் கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நின்றது.

தற்பொழுது அந்த முடிவு கைவிடப்பட்டதை அடுத்துப் பொருள்கள் ஏற்றும் நடவடிக்கை நேற்று ஆரம்பமாகி உள்ளது. (இ-3)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்.)

## பௌசி வவுனியா வருகிறார்

சுகாதார அமைச்சர் பௌசி இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்கிறார்.

போக்குவரத்து சேவையை சீர் திருத்துவது தொடர்பாக அவர் அங்கு ஆராய்வார்.

# விசாரணைகுழு வெளியிட்ட பட்டியல் சங்கம் அதிருப்திதெரிவித்து அறிக்கை

## 600 பேரில் ஒருவரின் பெயராவது பட்டியலில் இல்லையாம்

யாழ்ப்பாணம், ஒக். 2

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதான பின்னர் தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு இதுவரை மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து கண்டு பிடித்த 176 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை யாழ். செயலகத்துக்கு அனுப்பி இருந்தது அல்லவா?

இது குறித்து கைதானோர் தகவல் தெரியாதுள்ளோர் பாதுகாவலர் சங்கம் அதிருப்தி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி இதுவரை தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக 600 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை தாம் வெளியிட்டிருந்ததாகவும் —

ஆனால் இந்த 600 பேரில் ஒருவரின் பெயராவது பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட பட்டியலில் இடம்பெறவில்லை என்றும் — கைதானோர், தகவல் தெரியாதுள்ளோர் பாதுகாவலர் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"உதயன்" பத்திரிகையில் வெளியான 176 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை வாசித்தறிந்து மிகவும், வேதனையும், ஏமாற்றமும் அடைந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் உண்ணாவிரதம்

வவுனியா, ஒக். 2

யாழ். மாவட்டத்தில் காணாமற்போனோர் விவகாரம் தொடர்பாக இன்று காலை 9 மணி முதல் வவுனியா கந்தசுவாமி கோயில் வளவில் அடையாள உண்ணாவிரதம் நடைபெறவிருக்கிறது.

புளொட் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த உண்ணாவிரதத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் சமுகமளிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் — கொழும்பில் இன்றும் நாளையும் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் [illegible] இருந்து சென்ற காணாமல்போனோரின் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளும் பங்குபற்றுவர். (இ-164-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிமாவட்ட மாணவர்களுக்கான பட்டமளிப்பு இரு இடங்களில்

யாழ்ப்பாணம், ஒக். 2
யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான பட்டமளிப்பு வைபவத்தை இரு இடங்களில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து தெற்கில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றயாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 300 பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பில் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அலுவலகத்தில் நடைபெறும்.

வவுனியா வளாகத்தின் ஆங்கிலம், கணக்கியல், கணிதம் ஆகிய துறை சார்ந்த 150 பேருக்கு டிப்புளோமா சான்றிதழ் வழங்கும் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி வவுனியா நகரசபையில் நடைபெறும்.

இந்த விழாக்களில் பங்குபற்ற யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அங்கு செல்கிறார். (இ-3)


## விற்பனைக்கு

அன்ரெனா கிளிப்ஸ் (பிளாஸ்ரிக்), யங்சன் பொக்ஸ், சேக்கிற் போர்ட், அன்ரெனா வயர், பூஸ்டர், T. V சொக்கற், ஸ்பீக்கர் கோண்ஸ் (பேப்பர்), றேடியோ, வீடியோ கசெற், பிலிம்றோல், I. C, டெக்பெல்ற் செற் என்பன விற்பனைக்கு உண்டு.
அன்ரெனா கிளிப்ஸ் மொத்த விற்பனைக்கு விலைக் கழிவு உண்டு.

**றெலிவொய்ஸ் என்ஜினியேர்ஸ்**
310, பலாலி வீதி,
ஆலடிச்சந்தி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(50226)



## கண்டீர்களா?
## செல்வன் செ. ஆதித்தன்



என்பவரை (12 வயது) கடந்த 29-09-97 திங்கட்கிழமையில் இருந்து காணவில்லை.
கண்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
S. காந்தி
45, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

★ சன்மானம் வழங்கப்படும். (50224)



## கொக்குவில் இந்துக் கல்லூரி
## வணிக மாணவர் மன்றம்

**வணிக சுடர் வெளியீடு-4**

காலம்: 03-10-97 வெள்ளிக்கிழமை காலை 10 மணி
இடம்: கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்
**கலாநிதி திரு. க. குணராசா**
[செங்கையாழியான்]
(பதிவாளர், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)

பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(47450)



## யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய
## ஆசிரியர்கள் கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கலும்

1996ஆம் ஆண்டு நடைபெற்ற
1995ஆம் ஆண்டுக்கான
விசேட புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தி எய்திய மேற்படி பாடசாலை
மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும்
ஆசிரியர்கள் கௌரவிப்பும்
எதிர்வரும் **05-10-97** ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 மணிக்கு (புதிய நேரம்)
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில்
நடைபெறும். சித்தியெய்திய மாணவர்கள் பாடசாலைச் சீருடை, கழுத்துப்பட்டி (SJB) அணிந்து தமது தாய், தந்தையர்களுடன் சமுகம் அளிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

க. சிவபாலசிங்கம்
செயலாளர்
செயற்குழு.
(C/1672)


## சமய சந்நிதியில்

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான அம்மன் ஆலயங்களிலும், அம்மன் விக்கிரகம் உள்ள ஆலயங்களிலும் இன்று வியாழக்கிழமை முதல் நவராத்திரி பூஜை ஆரம்பமாகிறது.

விசேட பூசை ஆராதனைகளின் போது குமரகுருபர சுவாமிகளின் ''சகலகலாவல்லி மாலை'' பாடல்கள் ஓதப்படும்.

தென்புலோலி ஸ்ரீ முதலி அம்பாள், கொழும்புத்துறை மணலியம்பதி அம்மன் ஐயனார், ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர், கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆகிய ஆலயங்களிலும் இன்று முதல் நவராத்திரி பூசை நடைபெறும். (ஐ-30-109)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 10 ஆம் திகதிவெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ஐ-9)

★ ★ ★

யாழ். இராசாவின் தோட்டம் அருள்மாதா ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியது. ஒன்பதாம் நாள் நவநாள் கூட்டுத் திருப்பலி இடம் பெறும்.

எதிர் வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு நற்கருணை ஆராதனை நடைபெறும். 8ஆம் திகதி புதன் கிழமை காலை திருப்பலி ஒப்புக் கொடுத்தலுடன் உற்சவம் முடிவுறும். (ஐ 30)

★ ★ ★

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு ''பக்திநெறி'' என்ற தலைப்பில் செல்வன் சிவஞானம்-பாலமுரளிசமயச் சொற்பொழிவு ஆற்றுவார். (ஐ-30)


## WANTED

A Teacher to Teach
**Zoology and Botany**
in the
Advanced Level classes.
Contact immediately.

The Principal,
Jaffna College,
Vaddukoddai.
(C/1674)


## சுன்னாகம் கொலை வழக்கு:
## தடயப் பொருள்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு

சுன்னாகம் கொலை வழக்கு தொடர்பான தடயப் பொருள்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்புமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ. என். எஸ். இராமச்சந்திரன் உத்தரவிட்டார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த பொன்னன் கதிரவேலு என்பவரைக் கொலை செய்ததாக தந்தையும், அவரது இரு மகன்மாரும் யாழ். நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர்.

இக்கொலை தொடர்பாக இரு தடிகளையும், கிழிந்த உடைகளையும் பொலீஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இவற்றை இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்புமாறு உத்தரவிட்ட நீதிவான் மூவரையும் இம்மாதம் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெரிவித்தார். (இ-3)

## வாதுவவில் சிமெந்து

யாழ். மாவட்ட புனர்வாழ்வு பணிகளுக்காக 10 ஆயிரம் சிமெந்து பைக்கெட்டுகளை சிமெந்துக் கூட்டுத்தாபனம் எடுத்து வந்துள்ளது.

''வாதுவ'' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள இந்த சிமெந்து கடந்த முறைகளிலும் பார்க்க குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவிருப்பதாக சிமெந்து கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் சிமெந்தை எடுத்துவர சிமெந்துக் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## பெண் பொலீஸ் கட்டிலால் விழுந்து காயம்

படுக்கையில் கட்டிலில் இருந்து விழுந்து பெண் பொலீஸார் ஒருவர் தலையில் காயமடைந்தார்.

யாழ். பொலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஜி. குமாரி (வயது 20) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## குரங்கு கடித்து குழந்தை காயம்

குரங்கு கடித்ததால் குழந்தை ஒன்று படுகாயமடைந்தது.

திருநெல்வேலியில் மூன்று நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மேவின் தியோனன் என்ற மூன்று மாத ஆண் குழந்தையே காயமடைந்தது.

குழந்தையை தனியாக வீட்டில் படுக்க வைத்துவிட்டு தாயார் தண்ணீர் அள்ளச் சென்ற சமயம் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-15)


## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகங்களின்
பட்டப்பாட நெறிகளின் விரிவுரைகள்
பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

**97/98 ஆம் ஆண்டின் புதிய பிரிவுகள்**

GAQ 1st IN COM
B A PART I B.COM PART I ] **04-10-97**

B. COM PART II
B A PART II ] **01-11-97**

**மீட்டல் GAQ யாழ்.பேராதனை 11-10-97**
**BA பேராதனை 05-10-97**
[1997 GAQ பரீட்சைக்குத் தோற்றியோருக்கானது]

விவரங்களுக்கு:
**பட்டப் படிப்புகள் கல்லூரி**
73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம்: தினசரி காலை 7 மணி - 10 மணி வரை
பிற்பகல் 2 மணி — 4 மணி வரை
(50228)



## ★ வாழ்த்துகின்றோம் ★

சமஸ்கிருதத்துறையில் (B. A. Hons) பட்டம்பெற்று
யாழ், பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக
நியமனம் பெற்ற நல்லூர் சிவன் கோயில்
**பிரம்மஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணானந்த சர்மா**
அவர்களையும்
அண்மையில் இணுவில் தர்மஸாஸ்தா காயத்திரி பீடத்தில்
''சிவாகம கிரியா தத்துவநிதி''
என்னும் பட்டம் பெற்ற
**சிவஸ்ரீ கு. ஸ்ரீகாந்தக் குருக்கள்**
**சிவஸ்ரீ ப. ஜயகுமாரக் குருக்கள்**
**சிவஸ்ரீ இரா. கங்காதரக் குருக்கள்**
ஆகியோரையும் இந்து மத குருமார் ஒன்றியம்
பல்லாண்டு காலம் சேவை செய்ய வாழ்த்துகின்றது.

நன்றி.

**இந்துமத குருமார் ஒன்றியம்**
யாழ்ப்பாணம்.
(50229)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மலேசியாவில் மற்றொரு காட்டுத் தீ!

## வேகமாகப் பரவுகின்றது!!

**கோலாலம்பூர், ஒக். 2**

**இந்தோனேசியாவில் பரவிய பெரும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த முடியாமல் தென்கிழக்காசிய நாடுகள் திண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் மலேசியாவின் மத்திய பகுதியில் மற்றொரு காட்டுத் தீ ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**

மலேசியாவின் மத்திய ரெறாங் மாகாணத்தில் உள்ள பழங்குடி மக்களின் குடியிருப்புக்களுக்கு அருகே ஏற்பட்ட தீ வேகமாகப் பரவி சுமார் 2,500 ஹெக்ரயர் காட்டுப் பிரதேசத்தை நாசமாக்கியுள்ளது. தீ மேலும் வேகமாகப் பரவிக் கொண்டிருப்பதாக நேற்றுப் பகலில் வெளியான செய்திகள் தெரிவித்தன.

இந்தோனேசியாவின் சுமாத்திராவிலும், போர்ணியோவின் சில இடங்களிலும் ஏற்கனவே எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட தீயணைப்புப் படையினர் இரவு பகலாகப் போராடி வருவது தெரிந்ததே.

இந்தக் காட்டுத் தீயினால் பரவிய புகை மண்டலம் காரணமாக மலேசியாவிலும் பரவலாக பாதிப்பு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஈராக் எல்லைக்குள் நுழைந்து ஈரானிய விமானங்கள் தாக்கு!

பாக்தாத். ஒக். 2

ஈரானின் இராணுவ விமானங்கள் ஈராக்கின் வான்பரப்புக்குள் நுழைந்து ஈராக்குக்கு எதிராகப் போராடும் முஜாஹிர்தீன் போராளிகளின் இரு முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

இந்தத் தாக்குதல்களால் அந்த முகாம்கள் சேதமடைந்தாகவும் —

ஆனால் அங்கிருந்த எவரும் கொல்லப்படவோ அல்லது காயமடையவோ இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஈராக்கிய பொதுமக்கள் இருவர் காயமடைந்ததாக முஜாஹிர்தீன் போராளிகள் தெரிவித்தனர்.

இந்த அத்துமீறல் தனது இறைமையைமீறுவதாக உள்ளது என ஈராக் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஈரானின் 8 இராணுவ விமானங்கள் உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்கு எல்லையைக் கடந்து ஈராக்கிய வான்பரப்புக்குள் பறந்து சென்றன என ஈராக்கிய அலுவலர்களும் ஈரானிய முஜாஹிர்தீன் அமைப்பின் சார்பாக பேசவல்ல அதிகாரி ஒருவரும் தெரிவித்தனர்.

ஈரானிய விமானங்கள் தலைநகர் பாக்தாத்துக்கு தெற்கேயுள்ள கட் என்ற இடத்திலும் தலைநகருக்கு வடக்கேயுள்ள முஜாஹிர்தீனகளின் இரு முகாம்கள் மீதும் ஒரே நேரத்தில் குண்டு வீசித் தாக்கின.

இவ்வாறு ஊடுருவித் தாக்கிய விமானங்கள் மீது விமான எதிர்ப்புப் படையினர் சுட்டார்கள் எனவும் —

தமக்குச் சொந்தமான விமானங்கள் அவற்றை எல்லைக்கு அப்பால் விரட்டின எனவும் — ஈராக் தெரிவித்தது.

முஜாஹிர்தீன் மீது இது போன்ற தாக்குதல்களை ஈரான் நடத்துவது இது முதல் தடவை அல்ல.

முஜாஹிர்தீன் அமைப்பைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் பேர் ஈராக்கிலுள்ள தளங்களில் உள்ளார்கள்.

ஈராக்கின்இறைமையைஆக்கிரமிப்பதற்கு தடைசெய்யப்பட்ட வான்பரப்பை ஈரான் தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறது என ஈராக் குற்றஞ்சாட்டி உள்ளது.

# இஸ்ரேல்-பலஸ்தீன அமைதிப்பேச்சு இம்மாதம் மீண்டும் ஆரம்பமாகும்

## நியூயோர்க் மாநாட்டில் இருதரப்பும் இணக்கம்

ஜெரூஸலம்: ஒக். 2

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் இம்மாதம் மீண்டும் ஆரம்பமாகி உள்ளன.

இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் டேவிட் லெவி பலஸ்தீன சுயாட்சித் தலைவர் யஸீர் அரபாத்தின் பிரதிநிதி மஹ்மட் அப்பாஸ் ஆகியோரை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் ஆல்பிரைட் நியூயோர்க்குக்கு அழைத்து நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது இது தொடர்பான இணக்கம் ஏற்பட்டது.

மேற்குக் கரையில் உள்ள பழைய ஜெரூஸலத்தில் யூதக் குடியிருப்புக்களை அமைக்கும் இஸ்ரேல் பிரதமர் நத்தன்யாகுவின் நடவடிக்கையினால் கடந்த 6 மாதங்களாக இஸ்ரேல் — பலஸ்தீன பேச்சுக்கள் தடைப்பட்டது தெரிந்ததே.

யூதர்கள் வாழும் மேற்கு ஜெரூஸலத்தில் நடத்தப்பட்ட இரு தற்கொலைத் தாக்குதல்கள் காரணமாக நிலைமை மோசமடைந்தது.

பலஸ்தீன தலைவர் அரபாத் ஹமாஸ், ஹிஸ்புல்லா போன்ற தீவிரவாத இயக்கங்களை அழைத்து பேச்சுக்கள் நடத்தினார்.

1993 ஆம் ஆண்டு இஸ்ரேல் — பலஸ்தீன பிரதிநிதிகளுக்கிடையில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை செயற்படுத்துவதற்காக இரு தரப்பினரும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேற்குக் கரையில் உள்ள பழைய ஜெரூஸலத்தில் யூதக் குடியிருப்புக்களை அமைக்கும் நடவடிக்கைகளை இஸ்ரேல் கைவிட்டால் மாத்திரமே சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கத் தயார் என்று பலஸ்தீன சுயாட்சித் தலைவர் அரபாத் தெரிவித்து வந்தார்.

பலஸ்தீனர்கள் பயங்கர வாதத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் நத்தன்யாகு கோரிக்கை விடுத்து வந்தார்.

பயங்கர வாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சரும் பலஸ்தீனத் தலைவர்களை வலியுறுத்தி வந்தார்.

இதனை அடுத்து பலஸ்தீன பாதுகாப்புப் படையினர் டசின் கணக்கான ஹமாஸ் உறுப்பினர்களை மேற்குக் கரையிலும் காஸாவிலும் கைது செய்துள்ளதுடன் காஸாவில் உள்ள ஹமாஸுடன் தொடர்புடைய 16 சமூக நல நிறுவனங்களையும் மூடி உள்ளனர். (இ)

# இந்திய ஏவுகணைத் திட்டம்; பாகிஸ்தான் அச்சம் தெரிவிப்பு

புதுடில்லி, ஒக். 2

'நெடுந்தூர ஏவுகணைகளைத் தயாரிக்கும் இந்தியாவின் திட்டம் இந்து சமுத்திரம் பிராந்தியத்தின் முறுகல் நிலையை அதிகரிக்கும்'' இப்படி பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுடன் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையேவேண்டுமெனவும் — பகைமையற்ற மார்க்கம் வேண்டுமெனவும் — பாகிஸ்தான் வலியுறுத்தி உள்ளது.

இந்தியா தானாகவே வடிவமைத்த பிருதிவி ஏவுகணை உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டது என கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்தியா அறிவித்திருந்தது. (இ 4)

# ஹமாஸ் இயக்க ஸ்தாபகரை இஸ்ரேலிய அரசு விடுவித்தது!

பலஸ்தீனியர்களுடனான உறவை மேம்படுத்தும் ஒரு முயற்சியாக ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தின் ஸ்தாபகர் ஷேக் அஹமது அஸீஸை இஸ்ரேல் விடுவித்துள்ளது.

இதற்கான உத்தரவை பிரதமர் நத்தனியாகு விடுத்திருந்தார்.

பலஸ்தீன மற்றும் இஸ்ரேல் பிரதிநிதிகளிடையே நியூயோர்க்கில் அமெரிக்காவின் ஏற்பாட்டில் சமரச முயற்சிகள் நடைபெற்று வரும் தருணத்தில் நல்லெண்ண நடவடிக்கையாக இவரை விடுவிக்குமாறு ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் இஸ்ரேலிடம் கோரியிருந்தார்.

## இருதரப்பும் மாறிமாறிப் பீரங்கித் தாக்குதல்:

# இந்திய - பாகிஸ்தான் எல்லையில் 36 பேர் பலி! கட்டடங்கள் நாசம்!

ஜம்மு, ஒக். 2

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் எல்லையோரம் உள்ள கார்ஜில் நகரம் மீது பாகிஸ்தானியப் படையினர் நேற்று முன்தினம் மாலை கடும் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். இதனால் பொதுமக்கள் 16 பேர் கொல்லப்பட்டனர்; 20 பேர் காயமடைந்தனர்.

கண்மூடித்தனமான முறையில் நடத்தப்பட்ட இத்தாக்குதலினால் இராணுவ இலக்குகள் அல்லாத பொது மருத்துவமனை ஒன்றும், ஸியா மசூதி உட்பட பல கட்டடங்களும் நாசமடைந்ததாகவும் —

பெரும் எண்ணிக்கையான மக்கள் காயமடைந்ததாகவும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தாக்குதல் நடந்த சிறிது நேரத்திலேயே புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதர் இந்திய வெளியுறவுச் செயலகத்துக்கு அழைக்கப்பட்டார். அங்கு வைத்து இத்தாக்குதல் குறித்த கடும் ஆட்சேபத்தை இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்,

கார்ஜில் நகரத்தை சுமார் 40 [illegible] தாக்கியுள்ளன.

தாக்குதல் ஆரம்பித்த சிறிது நேரத்தில் இந்தியப் படையினர் பதில் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதனால் பாகிஸ்தான் பகுதிக்குள் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது. சுமார் 20 பேர் அதில் பலியாகியுள்ளனர்; கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. (ஐ)

## உலக அரங்கில்

# பெருவில் எலும்புக்கூடு குவியல்

லீமா, ஒக். 2

பெருநாட்டுச் சுரங்கம் ஒன்றில் நேற்று முன்தினம் 50 பேரின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இத்துடன் மொத்தம் 70 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1980களில் பெரு அரசுடன் ஆயுதப்போராட்டம் நடத்தி வந்த மாவோ கம்யூனிஸ்ட் போராளிகளை இராணுவம் கொன்று குவித்து சடலங்களை புதைத்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. (இ-3)

# புகை மூட்டத்தினால் இந்தியா பாதிக்கப்படாது

இந்தோனேஷியாவில் காட்டுத் தீயினால் ஏற்பட்டுள்ள புகை மூட்டத்தின் தாக்கம் இந்தியாவைப் பாதிக்காது.

இந்திய வளியியல் ஆய்வாளர்களில் ஒருவரான சவான் குமார் விஸ்வாத் என்பவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயினால் இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படுமென ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகையில் கடந்த வெள்ளியன்று வெளியான செய்திக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் [illegible] தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

# அல்ஜீரியாவில் மேலும் 60 பேர் படுகொலை

அல்ஜியர்ஸ் ஒக் 2

கடந்த இரு தினங்களில் அல்ஜீரியாவில் மேலும் 60பேர் கொல்லப்பட்டனர்.

1992 ஆம் ஆண்டில் இருந்து இஸ்லாமிய தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களில் இதுவரை 60 ஆயிரம் பேருக்கு மேல கொல்லப்பட்டுள்ளனர்.

வெளி நாட்டவர்கள் உட்பட பொதுமக்களே பெருமளவு பலியாகி உள்ளனர்,

1992 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் இஸ்லாமிய தீவிரவாதிகள் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்ற இருந்த சமயம் ராணுவம் தலையிட்டு தேர்தலை செல்லுபடியற்றதாக்கியது.

அல்ஜீரியாவில் இஸ்லாமிய அரசு ஒன்றை ஏற்படுத்துவதற்காக இஸ்லாமிய தீவிரவாதிகள் போராடி வருகின்றனர்,

## புதிய தளபதி

இந்திய இராணுவத்தின் புதிய தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் வேல் பிரகாஷ் மாலிக் நேற்று பதவி பேற்றார். இதுவரை இப்பதவியை வகித்த ஜெனரல் சங்கர் ராய் சௌத்திரி தமது 40 ஆண்டுகால இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடிக்கடி தடைப்படும் நெடுந்தீவுப் படகுசேவை

## பயணிகள் பெரும் அவதி

நல்லூர் ஒக். 2

நெடுந்தீவுக்கான பயணிகள் படகுச் சேவை அடிக்கடி ஸ்தம்பிதமடைவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ். நகரில் இருந்து குறிகாட்டுவான் செல்லும் பயணிகள் அங்கு படகுச் சேவைகள் இடம் பெறாத வேளையில் நீண்ட நேரம் குறிகட்டுவான் துறைமுகத்தில் கஷ்டங்களின் மத்தியில் காத்திருந்து விட்டு மீண்டும் பி. ப. 5 மணிக்கு யாழ். நகர் திரும்பவேண்டி உள்ளது,

காலை 7 மணிக்கு குறிகட்டுவான் செல்லும் நெடுந்தீவுப் பயணிகள் படகுச் சேவை இடம்பெறாத நாள்களில் பி ப 3 மணிவரை உணவுக் கஷ்டங்களுடன் திடீர் திடீரென இடம்பெறும் அசம்பாவிதங்கள் குறித்த பீதியுடனும் குறிகாட்டுவான் துறைமுகத்தில் தரித்து நிற்க வேண்டியுள்ளது.

நெடுந்தீவுக்கு சீரான படகுச் சேவை தேவை எனவும் யாழ்ப்பாணத்தில் உள்ள சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நெடுந்தீவு கடல் பயணச் சேவையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் நெடுந்தீவுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ - 103)

# சந்தைக்குள் வியாபாரம் செய்ய அஞ்சும் வியாபாரிகள்

நெல்லியடி, ஒக் 2

இடிந்து விழும் நிலையில் உள்ள சந்தைக்குள் வியாபாரம் செய்ய அஞ்சும் வியாபாரிகள் வீதி ஓரங்களில் வைத்து மரக்கறிகளை விற்பனை செய்கின்றனர்.

துன்னாலை வடக்கு அல்லையம்பதி சந்தையிலேயே இதுஇடம்பெறுகின்றது.

இதே வேளை இங்குள்ள ஆட்டிறைச்சிக் கடையும் போதிய வசதிகளற்ற நிலையில் காணப்படுகின்றது. (இ - 109)

# செல்வா நினைவாலயத்தில் மலரஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 2

தந்தை செல்வநாயகம் தமது தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் பதவியைத்துறந்த 25ஆவதுஆண்டை முன்னிட்டு யாழ். நகரில் உள்ள அன்னாரின் நினைவாலயத்தில்மலரஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

தந்தை செல்வநாயகம் நினைவுக்குழுவினரின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மலரஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

தமிழ்மக்கள் இந்நாட்டில் ஓர் அடிமை இனமாக அழிவதா? அல்லது சுதந்திர மக்களாக வாழ்வதா? என்ற தமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் ஒரு பொதுக்கருத்துக்கணிப்பாக அமையும் பொருட்டாக காங்கேசன் துறையில் ஓர் இடைத்தேர்தலை நிற்பந்திக்கும் வகையில் தந்தை செல்வா தமது தேசிய அரசுப்பேரவை உறுப்புரிமையை 1972ஒக்டோபர் மூன்றாம்திகதி துறந்தமை குறிப்பிடத்தக்கது.

தந்தை செல்வா நினைவாலயப் பகுதி ஒரு பொது இடமாகக் கருதப்பட்டு தற்பொழுது வாராந்தம் அங்கு சுத்திகரிப்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. (அ)

# கடும் வரட்சியால் வாழைகள் அழிவு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடும் வெப்பம் நிலவுகின்றது. வெப்பத்துடன் கூடிய காற்றும் வீசுவதால் பல பயிரினங்கள் அழிந்து வருகின்றன.

தோட்டப் பகுதிகளில் இறைப்பு இன்மை காரணமாக பல வாழைத் தோட்டங்கள் அழிந்துள்ளன. உரும்பிராய், மருதனார் மடம், உடுவில், இணுவில் போன்ற இடங்களிலுள்ள தோட்டங்களில் வாழைகள் பல கருகியும், முறிந்து விழுந்தும் உள்ளன.

வெப்பம் காரணமாக தென்னை, மா, பலா, எலுமிச்சை போன்ற பல பயன்தரு மரங்கள் கூட பட்டுப் போயுள்ளன.

காலபோக விவசாயத்துக்குக் தேவையான ஆயத்தங்களைச் செய்து விட்டு விவசாயிகள் மழையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். (ஐ -152)

# கொட்டடிப் பகுதியில் 99 பேருக்கு ரூ. 5, 000

கொழும்புத்துறை, ஒக். 2

யாழ். கொட்டடி (ஜே-83) கிராம சேவையாளர் பிரிவில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான ரூபா 5ஆயிரம் கொடுப்பனவு முதற் கட்டமாகத் 99 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

கொட்டடி வீதியில் உள்ள கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பட்டியலில் உள்ளவர்கள் தத்தமது பங்கீட்டு அட்டை, வங்கிப்புத்தகம், அடையாள அட்டை, ஐந்து ரூபா முத்திரை என்பனவற்றுடன் நேரில் தம்மை அலுவலகத்தில் சந்திக்குமாறு கிராம சேவையாளர் திரு. ந. லிங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

# சத்திர சிகிச்சைப் பணிகள் மந்திகையில் ஸ்தம்பிதம்

மந்திகை மருத்துவமனையில் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் கடமையாற்றி வருகின்ற போதும் அங்கு மயக்க மருந்து நிபுணர் இன்மையால் சத்திர சிகிச்சைகள் நடைபெறுவதில்லை. இதனால் மந்திகையிலுள்ள சத்திர சிகிச்சைப் பிரிவு ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இங்கு முன்பு கடமையாற்றிய எம். எஸ். எவ். மருத்துவக் குழு கடந்த வாரம் முதல் தனது சேவையை நிறுத்தியுள்ளது.

இதேவேளை — சத்திர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றிய தாதிகளும், ஊழியர்களும் வேறு பிரிவுகளில் தற்காலிகமாக கடமை புரிந்து வருகின்றனர். (ஐ-109)

# சமுர்த்தி ஊக்குவிப்பாளரின் பணி சமுதாயத்துடன் ஒருங்கிணைந்தது

## நியமனம் வழங்கும் வைபவத்தில் உரை

நெல்லியடி, ஒக். 2

"மக்களுக்குப்பணி செய்வதற்கு அர்ப்பணிப்புடனான சேவையை சமுர்த்தி உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. சமுதாயத்துடன் நீங்கள் ஒருங்கிணைந்து செயற்பட்டு நல்ல மனப்பான்மையுடன் சேவை புரிய வேண்டுமென்று சமூகம் எதிர்பார்க்கின்றது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண பாதுகாப்புக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பி. ஏ. கருணதிலகா இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சியில் சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் எல். விஜயரட்ணா தலைமையில் இம்மாத [illegible]முற்பகுதியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மேஜர் ஜெனரல் கருணதிலகா தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

வடக்குக் கிழக்கைப் பொறுத்த வரையில் மக்கள் சொத்துக்களை, வீடுகளை மட்டுமல்ல கைத்தொழிற் சாலைகளையும் இழந்துள்ளுள்ளனர். காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலை கூட இயங்காத நிலையிலிருக்கின்றது. இந்த நிலையில் மக்களின் நாளாந்த வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. மக்களது வாழ்க்கை இயந்திரத்தை இயக்க சிறிதளவு எண்ணெய் விட்டு உந்து சக்தி கொடுத்து அவர்களின் வாழ்க்கையைப் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும். சமுர்த்தி நியமனம் மூலமாக சம்பளத்தைப் பெறுவதிலும் பார்க்க கடமையே மிக முக்கியம் என்று மனதிற் கொள்ள வேண்டும். அரசினால் மக்களிடம் செல்ல முடியாது. ஆதலினால் மக்களிடம் செல்வதற்கு உங்களை ஈடுபடுத்தும் ஒரு சேவையே சமுர்த்தியாகும்.

அநேக அரச ஊழியர்கள் பெரும்பாலும் 8 மணிமுதல் 4 மணிவரை சம்பளத்துக்காகத் தொழிலைப் பார்க்கின்றார்கள். நாட்டுக்குச் சேவை செய்வதில் அவர்களுக்கு அக்கறையில்லை. அலுவலகங்களுக்குச் சென்றால் அந்த நேரங்களில் அதிகாரிகள் அங்கு இருக்கமாட்டார்கள்.

### டாக்டர்கள் பற்றாக்குறை

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து இலட்சம் மக்கள் இருக்கின்றார்கள். வைத்திய சேவைக்கு ஆஸ்பத்திரிகளில் வைத்தியர்கள் இல்லை. ஆனால் அவர்கள் வெளியிடங்களில் வேறுவிதமாக வைத்தியசேவைகளை நடத்துகின்றார்கள்.

பொரளையில் வைத்தியர்களின் பெயர்ப்பட்டியல்கள் தொங்கவிடப்பட்டிருக்கும். அதில் எட்டுப்பேர் தமிழ் டாக்டர்களாக இருப்பர்.

கொழும்பில் தனியார் வைத்தியம் மேற்கொள்ளும் வைத்தியரின் தாய்க்கு இங்கு சுகயீனம் ஏற்பட்டால் பனடோல், டிஸ்பிறின் போன்றவைகளை கொடுக்கும் பொறுப்பு எனக்கு உண்டு. வைத்தியத்துறையில் முழு அளவில் அனுபவமில்லாத பூரண சித்தியடையாத 20 டாக்டர்களை யாழ்ப்பாணத்தில் பகுதி நேர சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம். இதைவிட மேலும் ஆறு டாக்டர்கள் இங்கு வரவுள்ளனர். இதேவேளை இங்கு பணிபுரியும் டாக்டர்களான கணவனும், மனைவியும் விமான ரிக்கற் கேட்டு என்னிடம் வந்துள்ளனர்.

பிரபல்யமான பல்கலைக் கழகங்கள் பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்களை உருவாக்கின. தற்பொழுது அங்கு இவர்கள் இல்லை. மாணவர்கள் மட்டுமே கட்டடங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சிங்கள சிப்பாய்கள் பிசாசுகள் என எண்ணிய நீங்கள் கடந்த இரண்டுவருடங்களாக இராணுவ படையணியைப் பற்றி ஒரு மதிப்பீட்டை செய்திருப்பீர்கள். நாம் பயங்கரவாதிகளுடன் சண்டை செய்தாலும் எண்பது சதவீத நேரத்தை மக்கள் பணிக்கு அர்ப்பணித்து வருகின்றோம்.

சிப்பாய் செய்யும் தவறுக்கு உதவி செய்ய நாம் வரவில்லை. அப்படியானோர் இராணுவத்திலிருந்து தூக்கி வீசப்படுவார்கள். மக்களுக்கு சேவை செய்வதற்காகவே அரசு எம்மை இங்கு அனுப்பி வைத்துள்ளது தற்பொழுது எமது பணி அறுபது வீதம் பூர்த்தியடைந்து விட்டது. அரசாங்கம் இதனை நூறு வீதம் பூர்த்தியாக்கியதும் நாம் இங்கிருந்து புறப்படுவோம் — என்றும் தெரிவித்தார்.

### அரச அதிபர் உரை

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் தமது உரையில் தெரிவித்ததாவது:-

இன்றைய நிகழ்ச்சி வடமராட்சிப் பகுதியில் மிக முக்கிய வைபவமாக விளங்குகின்றது. இப்பகுதி பிரிகேடியர் எல். விஜயரட்ணா அவர் "பலவிதமான விடா முயற்சியின் பயனாக இன்று 210 பேர் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமிக்கப்படுகின்றார்கள்.

வேலைகளை ஒருங்கிணைக்கும் வகையில் ஸ்தாபன ரீதியாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற பொது ஸ்தாபனங்கள் சேவை செய்ய முன்வந்தாலும் கஷ்டப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து செயற்பட அவைகளால் முடியாது அதனை எங்களாலும் செய்ய முடியாதிருந்தது.

ஒரே நாளில் வடமராட்சியில் நியமனம் பெறும் 210 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களும் மக்களுடன் ஒருங்கிணைந்து மூன்று மாத காலத்தினுள் அவர்களை இனங்கண்டு கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் போன்றவர்களின் அபிவிருத்தி மேன்மை அடையவும் எமது சுய காலில் நின்று ஏற்ற துறைகளைக் கண்டறியவும் இன்றைய சமுர்த்தி நியமனம் முக்கியமாக அமை [illegible]

[illegible] உரையாற்றினர். (ஐ - 109)

# பழுதடைந்த மினிபஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன

## பயணிகள் சிரமம்

கூடாரம் முதல் இருக்கை வரை சேதமடைந்த மினிபஸ்கள் பருத்தித்துறை—யாழ். சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் நீண்ட தூரம் பயணஞ் செய்வோர் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தின் கீழ் சேவையில் ஈடுபடும் இவ்வித பஸ்கள் பிரயாண வேளையில் பழுதடைந்து வீதிகளில் தடைப்பட்டு நிற்கின்றன.

தற்பொழுது வாகன உதிரிப்பாகங்கள் அனைத்தும் வாங்கக் கூடிய சூழ் நிலையிலிருந்தும், வாகன உரிமையாளர்கள் அவற்றைப் புனரமைப்புச் செய்யாது சேவையை நடத்துவது பெரும் குறையாக இருப்பதாக பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர். [ஐ-109]

## பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும்

# கால் நடைகளைப் பிடிக்க நவாலியில் குழு நியமனம்

நவாலி விவசாய சம்மேளனத்துக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி கால் நடைகளைப் பிடிப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

பெரும்போக நெற்செய்கை ஆரம்பித்திருப்பதை அடுத்து கட்டாக்காலி கால் நடைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதனை அடுத்தே ஒன்பது பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது கால் நடைகளைப் பிடிப்பதற்கான சட்டவிதி முறைகள் குறித்தும் இவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தரால் விரைவில் வழங்கப்படும் என்று நவாலி விவசாய சம்மேளனச் செயலாளர் எஸ். ரமேஸ் தெரிவித்தார். (ஐ)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளைத் தலைமையகம்

இ. செ. சி. சங்க யாழ். கிளை

### ஆண்டுப் பொதுக் கூட்டமும் தேர்தலும் - 1997

காலதாமதத்தை நிவர்த்தி செய்யும் நோக்கமாக, மேற்படி தேர்தலில் வாக்கு பதிவு செய்வது மு. ப. 10 மணி தொடக்கம் பி. ப. 1 மணி வரை நடைபெறும். தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெறும். இதனைச் சகல பிரிவுப் பிரதி நிதிகளும் கவனிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
01 - 10 - 97

(சி-1671)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
கல்லூரி

# காணாமற்போனோர் விசாரணை: முறைப்பாட்டாளர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

வடக்கு—கிழக்கில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் மீண்டும் தனது விசாரணைகளை பலாலியில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த விசாரணைக்குழு முன் இதுவரை விசாரணைக்குச் சமுகமளிக்காத அனைவருக்கும் இம்முறை விசாரணைக்குஅழைப்புவிடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன்கடந்த 01-01-95க்குப் பின்னர் காணாமற் போயுள்ளோர் தொடர்பாக இதுவரை முறைப்பாடு எதனையும் செய்யாமல் உள்ளவர்களுக்கும் விசாரணைக்குச் சமுகமளிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு இதுவரை முறைப்பாடு பதிவு செய்யாமல் இருப்போரை உடனடியாகத் தத்தமது விவரங்களுடனும், சாட்சிகள் எவரேனும் இருந்தால் அவர்களது பெயர், அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்கடனும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். செயலகத்தில் சமூகமளித்து பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள காணாமற் போனோரின் பெயர் விவரங்களை யாழ்.செயலகம் வெளியிட்டுள்ளது. அவர்களில் 100 பேரின் விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.

காணமாற்போனோரில் சிலரின் முகவரி இல்லாததால் அவர்கள் கைது செய்யப்பட்ட அல்லது காணாமற் போன இடம் அவர்களின் பெயருக்கு அருகே குறிப்பிடப்பட்டுள்ளது.

★ அமிர்தநாதன் கிறிஸ்ரி ஜெயநாதன் (கொழும்புத்துறை), அன்ரனி அனஸ் ரான்லெலி(15,ஈச்சமோட்டை பீச் றோட்), அன்ரனிப்பிள்ளை மருசீலன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), அன்ரன் கலிஸ்ரஸ் (சுதுமலை தெற்கு, மானிப்பாய்),அருள் நந்தன் (அராலி தெற்கு). பாலசிங்கம் பாலகுமார் (திருநெல்வேலி), பாலசுப்பிரமணியம் துஷாந்தன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), செல்லத்துரை (வேம்படி வீதி), செல்லையா ஜெகதீஸ்வரன் (22, அல்லாரை தெற்கு, மீசாலை), செல்லையா கந்தசாமி (கோண்டாவில்).

★ செல்லையா கந்தசாமி (அளவெட்டி), செல்லையா விஜயகுமார் (கோப்பாய் வடக்கு), ஈ. துரைராஜா (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை), எச்.எச் குணதாசன் (தலங்காவற் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி), ஐ ரி. ரூபராஜா (310, பருத்தித்துறை வீதி), ஜேசுதாஸன் வலென்ரின் (78/11, பீச்றோட், நாவாந்துறை), கே. பிரபாகரன் (நாவற்குழி), காளிமுத்து கோகுலதாசன் (செம்மணிச் சந்தி), கந்தசாமி நந்தன சந்திரா (அளவெட்டிகிழக்கு), கந்தசாமி சிவசக்திவேல் (புலோலி மேற்கு, பருத்தித்துறை).

★ கனகரட்ணம் கிருதரன் (குளத்தடி, கந்தரோடை), காந்தரூபன் சுரேஸ் (73/14, செள. பற்றிக்ஸ் வீதி, யாழ்.), கந்தையா சிவதாசன் (ஆனைக்கோட்டை), கந்தையா இராஜரட்ணம் குலதாஸ் (வரணி), கிட்னர் மாவிரதலிங்கம் (24, கற்குளம் லேன், கொட்டடி), குணரட்ணம் ஆறுமுகம் (கைதடி மேற்கு, சுன்னாகம்), கே. நடராஜா (இணுவில்), எல். றொஷான் (46, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை), மரியதாஸ் அன்ரன் மார்கன் (23, நியூபார்க் றோட் குருநகர்),

★ மார்க்கண்டு றங்கநாதன் (சம்பசிமாவடி, சாவகச்சேரி), மாயகிருஸ்ணன் சுரேஸ்குமார் (சுழிபுரம் மத்தி), முருகேசு ஜெயராஜ் குமரன் (19, பார்க் வீதி, நெக்ஸிமேசன் யாழ்.), மயிலு பரமநாதன் (நாவற்காடு, அச்சுவேலி), என். நாவலன் (மட்டுவில்), என். உதயகுமார் (யாழ்ப்பாணம்), நடராஜா ஸ்ரீதரன் (சுன்னாகம் கிழக்கு), நடராஜா செந்தூரன் (மீசாலை வடக்கு).

★ நின்னவன் அழகரட்ணம் (நவாந்காடு, வரணி), பி. சந்திரசேகரம் (143/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.), பி. சந்திரகுமார் (கச்சாய் வீதி, கொடிகாமம்), பி. தபேஸ்வரன் (கோவிலாக்கண்டி), பாக்கியநாதன் ஜூலியஸ், பரமசாமி சசிகரன் (தனங்களப்பு), பத்மநாதன் பத்மராஜா (திருநெல்வேலி சந்தி), பற்குணசிங்கம் றஜிந்திரன் (நல்லூர்), பொன்னையா தர்மராஜா (நாவற்குழி கிழக்கு, கைதடி), ஆர். ஆர். லெபோனன் (115,கல்லூரி வீதி, யாழ்).

★ ராஜநாயகம் நிமலன் (முத்துமாரி அம்மன் லேன், மட்டுவில் வடக்கு), கே. ரமேஸ் (கைதடி), ரட்ணபாலன் ஞானேஸ்வரன் (மூளாய்), ரட்ணம் தவராஜா (மட்டுவில்), ரவிராஜ் குமாரசுவாமி (23/1, சிறி தர்மபால மாவத்தை, மவுன்லவேனியா), றீகன் றோஹான் (கோயில் வீதி, யாழ்ப்பாணம்),

★ எஸ். டி. தவச்செல்வம் (வலம்பிறை, கைதடிமேற்கு, கைதடி), எஸ். ஜெயந்திநாதன் (மட்டுவில் தெற்கு), எஸ். லோகநாதன் (மானிப்பாய்), எஸ். சபேசன் (அச்சுவேலி வடக்கு), எஸ். செல்வரஞ்சன் (25/7, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம்), எஸ். வசந்தகுமார் (அரியாலை), எஸ். எஸ். வசந்தமோகன் (உரும்பிராய் தெற்கு), சதாசிவம் சந்திரசேகரம் (கண்டி வீதி, அரியாலை), சதாசிவம் விக்கினேஸ்வரன் (சாவகச்சேரி), செல்லத்துரை ஞானசம்பந்தன் (வண்ணார் பண்ணை).

★ செல்லத்துரை செல்வராஜா (586, செள. செபஸ்தியார் வீதி, யாழ்.), செல்வகுமார் (கோண்டாவில் வடக்கு), செல்வநாயகம் மகேந்திரன் (உரும்பிராய்), செல்வநாயகம் தனபாலசிங்கம் (அரியாலை), செல்வராஜா சந்திரன் (சுன்னாகம் தெற்கு), செல்வராஜா பார்த்திபன் (740, நாவலர் வீதி, அரியாலை), செல்வராஜா ரகுநாதன் (முடமாவடி, நல்லூர்), சண்முகம் லோகேஸ்வரன் கல்வியங்காடு), சின்னத்தம்பி திருச்செல்வம் (கோயிலாக்கண்டி, சாவகச்சேரி), சின்னத்தம்பி ஜெயந்திரன் (மீசாலை வடக்கு),

★ சின்னத்தம்பி கயிலங்கிரிநாதன் (மே/பா கிட்டினன் செல்லத்துரை, கரவெட்டி), சின்னத்தம்பி சசிதரன் (முல்லைத்தீவு), சின்னத்துரை பிரபாகரன் (கோப்பாய் தெற்கு), சிதம்பரப்பிள்ளை கிருபாகரன் (தனங்களப்பு), ஸ்ரனிஸ்லாஸ் ஜெஸிரஸீ (''வசந்த வாசகம்'', சுதுமலை மேற்கு), சுப்பிரமணியம் யோகிதராஜா(வல்வெட்டித்துறை), சுகுமார் பூபாலசிங்கம் (113, ஜின்துப்பிட்டியா வீதி, கொழும்பு 13), சிவசுப்பிரமணியம் முருகதன் (பெரியமாவடி, சாவகச்சேரி)

ரி. எம். மனோகரன் (ஏ 3, வீடமைப்புத்திட்டம், குருநகர்), தம்பையா வசந்தகுமார் (சுதுமலை தெற்கு), தம்பிராஜா சந்திரமோகன் (கோண்டாவில்), தங்கராஜா குணசீலன்(வியாபாரிமூலை), தங்கராஜா சுகந்தன் (புன்னாலைக்கட்டுவன்), தவராஜா ரமேஸ்(அம்மன்கோயிலடி, மட்டுவில்), தவராஜா அன்ரன் தெய்வேந்திரன் (அம்மன் கோயிலடி, மட்டுவில்), தவசி வீரசிங்கம் ஜெயராஜா (உரும்பிராய்மேற்கு), தயாகுணம் தயாபரன் (அரியாலைச் சந்தி) (ஐ)

## பனை, தென்னை மரங்கள் பெருமளவில் தறிப்பு

செம்பியன்பற்று, ஒக். 2

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள உடுத்துறை,வத்திராயன், மருதங்கேணிதெற்கு பகுதிகளில் உள்ள பனைகள், தென்னைகள் தறிக்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த மரங்கள் தறிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிலைக்கேணியில் இருந்து மருதங்கேணி தெற்கு வரை இதுவரை 7 ஆயிரம் தென்னைமரங்களும்—12ஆயிரம் பனைமரங்களும் தறிக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருறது. (இ-36)

## காக்கைதீவு மக்கள் தண்ணீரின்றி அவதி

காக்கைதீவு குடியேற்றத் திட்டத்திலுள்ள மக்கள் குடிதண்ணீர் பெறமுடியாது கஷ்டமடைந்து வருகின்றனர்.

முன்னர் இங்குள்ள தண்ணீர் தாங்கியில் பவுசர் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு நிரப்பப்பட்டு வந்ததாகவும் —

மீளக்குடியமர்தலுக்குப் பின்னர் இது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

தற்போது இங்குள்ள மக்கள் நீண்ட தூரம் சென்று குடிதண்ணீர் எடுத்து வருகின்றனர். (இ-135)

## பொருள்களை வடக்கே ஏற்றி அனுப்ப முடிவு

கொழும்பில் இருந்து வடக்கே செல்லும் கப்பல்களில் பொருள்கள் ஏற்றுவதை 14 நாள்களுக்கு இடைநிறுத்துவது என்று கடந்த ஞாயிறு தாம் எடுத்த முடிவை கைவிடுவது என யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை ஏற்றும் வர்த்தகர்கள் நேற்று முன்தினம் முடிவு செய்தனர்.

வடக்கே தனியார் வர்த்தகர்களின் பொருள்களை ஏற்றி வருவதற்காக ஓசன் சக்ஸஸ் என்னும் கப்பல் கொழும்பு முறைமுகத்திற்கு கடந்த 26 ஆம் திகதி வந்து சேர்ந்தது.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் பொருள்கள் அனுப்புவதை 14 நாள்களுக்கு நிறுத்துவது என்று முன்னர் எடுத்த முடிவை அடுத்தே அக்கப்பலில் பொருள் ஏற்றாத நிலையில் தரித்து நின்றது.

கொழும்பு சென்ற யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் இது தொடர்பாக அங்குள்ள யாழ். வர்த்தகர்களுடன் பேச்சு நடத்தினார்.

இதையடுத்து நேற்று மீண்டும் கூடி ஆராய்ந்த அவர்கள்—

தமது முன்னைய முடிவைக் கைவிடுவது என்றும்—

அஸ்ரோரியா கப்பல் மூழ்கியதால் ஏற்பட்ட நஷ்டத்துக்கான நஷ்டஈட்டை அரச அதிபர் ஊடாக வலியுறுத்திப்பெறமுயற்சிப்பது என்றும் தீர்மானித்தனர்.

''அஸ்ரோரியா கப்பலுடன் மூழ்கிய பொருள்களுக்குரிய நஷ்டஈடு வழங்குமாறு வலியுறுத்தியே தனியார் வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை ஏற்றி அனுப்பும் பணியை இரு வாரத்துக்கு நிறுத்த முடிவு செய்திருந்தனர் என்பது தெரிந்ததே. (உ-3)

## வங்கி ஓய்வூதியர் சங்கக் கூட்டம்

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் விசேட கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வடமாகாணத்தில் தற்போது வதியும் வங்கிச் சேவையில் இருந்து ஓய்வுபெற்றோரும், விதவைகளும், வங்கிச் சேவையில் இருந்து விலகியோரும் இதில் கலந்து கொள்வர்.

இக்கூட்டத்தில் தற்போது வங்கியில் பணிபுரியும் ஊழியர்கள் முன்னாள் வங்கி ஊழியர்களுக்கு மதிய போசனமளித்துக் கௌரவிக்க உள்ளனர். (ஐ-9)

## உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி

யாழ் நகரில் உருளைக் கிழங்கின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது ஒரு கிலோ உருளைக் கிழங்கு 60 ரூபாவாக விற்கப்படுகின்றது.

தனியார் வியாபாரிகள் உருளைக்கிழங்கை கொழும்பில் இருந்து கப்பலில் எடுத்து வந்திருப்பதாலேயே இவ் விலை வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## திவ்விய ஜீவன சங்கத்தில்

யாழ்ப்பாணம்,ஒக். 2

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நவராத்திரி பூஜை இன்று முதல் ஆரம்பமாகிறது. எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று அங்கு வித்தியாரம்பம் இடம்பெறும். (ஐ)

## பயிற்சி வகுப்பு

அரியாலை, ஒக். 2

விவசாயம் சம்பந்தமான பயிற்சி வகுப்பொன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஈச்சமோட்டையில் உள்ள உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

போஷாக்கு, வதிவிட வேளாண்மை, பழமரச் செய்கை போன்ற விடயங்கள் இப் பயிற்சி வகுப்பில் இடம்பெறும். (ஐ-17)

## கூ.சங்கத்தில் அவல், சர்க்கரை விநியோகம்

அரியாலை, ஒக். 2

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் நவராத்திரி பூஜையை முன்னிட்டு அவல், சர்க்கரை, கடலை போன்றவற்றை மக்களுக்கு நியாய விலையில் விற்பனை செய்து வருகிறது. இப்பொருள்கள் சங்கத்தின் கிளைகள் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-17)

## கமநல விற்பனை நிலையம்

40 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள கமநல சேவைகள் திணைக்களம் மாவட்ட கமநல உள்ளீடுகள் விற்பனை நிலையம் ஒன்றை நேற்று புதன்கிழமை திருநெல்வேலியில் திறந்து வைத்துள்ளது. (ஐ-9)

## சிறுவர் உளநலம் - 02

### மொழி விருத்திக்கு உதவும் மொழிச் சூழல்

★ பிறக்கும் போது பிள்ளை மொழி எதையும் அறியாத நிலையில் பிறக்கிறது; எனினும் அது ஒரு மொழிச் சூழலுக்குள் வந்து பிறக்கிறது.

★ பிள்ளையின் மொழித்திறன் வளர்ச்சிக்கு சிறந்த மொழிச் சூழல் இன்றியமையாதது.

★ நல்ல மொழிச் சூழலை உருவாக்குவது, குழந்தையின் குடும்பம், உறவு, சுற்றத்தின் பெரும் பணியாக அமைகிறது.

★ சொற்களைத் தெளிவாக, அழுத்தம் திருத்தமாக உச்சரித்தல், புதிய சொற்களை அறிமுகப்படுத்துதல், பொருள் வேறுபாடு புலப்படுமாறு பொருள்களை அடையாளங்காட்டி, அவற்றிற்குரிய சொற்களைப் பயன்படுத்துதல் என்பன, பிள்ளை மொழியைச் சரியாகப் புரிந்து கொண்டு பயன்படுத்த வழிசமைக்கும்.

★ மொழியைப் பேச ஆரம்பிக்கும் பிள்ளை முயன்று உச்சரிக்கும் மழலை ஒலிகளை ''இல்லை'' என்று நிராகரிக்காது, அன்போடு ஏற்று, சொற்களைச் சரியான உச்சரிப்போடு பிள்ளையின் முன்னிலையில் நாம் பேசுவோம்.

★ இல்லக் கிழவன் கிழத்தியரோடு குழந்தை கூடிக் குலாவி, கதைகேட்டு, உரையாடி, கற்பனை வளத்தோடு, மொழி வளத்தையும், அனுபவச் செழுமையையும் பெற்றுக் கொள்ள உதவுவோம்.



ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரும் உலக உளநல நாளை ஒட்டி இக்குறிப்பு பிரசுரமாகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

75 கோழிகளுக்குரிய இரட்டைத் தட்டு கோழிக்கூடு புதியது. கே. சதானந்தன், 25, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, நீராவியடி.
[50217]

### தவறிவிட்டது

யோகேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (661561653V), விசேட அடையாள அட்டையும், வேலை அடையாள அட்டையும் வதிரிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஊற்று நிறுவனம், புலோலி தெற்கு, பருத்தித்துறை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.
[50211]

இராசையா பூரணம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (225802572V) யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 34/02, கச்சேரி நல்லூர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்
[50216]

## விவசாயபீட விரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரைகள் கடந்த 25 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளன.

மருத்துவ பீடக் கட்டடத்தின் ஒரு பகுதியில் விவசாய பீடம் சிறப்பாக இயங்கி வருகின்றது.

கடந்த வருடம் இடம்பெற்ற இடப்பெயர்வு, யுத்த நிலைமை காரணமாக இடம்பெறாமல் போன விவசாய பீட விரிவுரைகளை ஈடுசெய்யும் முகமாக 94 — 95 கல்வியாண்டு மாணவர்களையும் 95—96 கல்வியாண்டு மாணவர்களையும் இணைத்தே தற்சமயம் விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன.
(ஐ-9)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 2

1997 - 98 ஆம் ஆண்டு பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு வலயம் - 2 பாடசாலைகளில் இருந்து ஆசிரிய பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
(ஐ)

## விளையாட்டு விழா

வலிகாமம் தெற்கு, ஒக். 2

உடுவில் கிழக்கு அண்ணா சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நிலைய மைதானத்தில் ஞா. தேவச்சந்திரன் தலைமையில் நடைபெறும். உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.
(ஐ-152)


**வெளிவந்துள்ளது!**

அஸ்ரன் பப்ளிகேசன்ஸ்

**O/L 1988 - 1996**

December

வினா - விடைகள் வெளிவந்துவிட்டன.

தொடர்பு:

**சாயி மெடிக்கல்ஸ்**

பலாலி வீதி,
திருநெல்வேலி.

(50208)



உ

ஓம் சக்தி

**சாவகச்சேரி**

**அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

# நவராத்திரி விழாவும் கேதாரகௌரி விரதமும்

அன்புடையீர்!

எதிர்வரும் **02 - 10 - 1997** வியாழக்கிழமை நவராத்திரி விழா ஆரம்பமாகி **11 - 10 - 1997** சனிக்கிழமை விஜயதசமி மானம்பூ உற்சவத்துடன் பூர்த்தி அடையும். நவராத்திரி விழா பூர்த்தி அன்று கேதார கௌரீஸ்வர விரதம் ஆரம்பமாகும். தொடர்ந்து 21 நாள்கள் நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொண்டு கேதார கௌரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் முன் கூட்டியே கோயில் காரியாலயத்தில் பதிந்து கொள்ளவும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

**பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா,**
ஆலய தர்மகர்த்தா.

(50123)


## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 30 | 02 |
| 06 | 10 |
| 1921 | 1986 |

**திருமதி மரியரத்தினம் குணரத்தினம்**

'' நாம் உம்மை என்றென்றும் மறவோம் ''

அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புகையிரத ஒழுங்கை,
சாவகச்சேரி.

(50186)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு; | உதிர்வு; |
|---|---|
| 14 | 24 |
| 01 | 09 |
| 1925 | 1995 |

**அமரர் இராலிங்கம் இரத்தினசிங்கம்**

திதி: **02 - 10 - 1997**

அன்பும் பண்பும் ஒருங்கமைந்த
எங்கள் குடும்பத் தலைவரே!
தாங்கள் தடம் பதித்து
நடந்தது ... எங்கள்
ஊரில் மட்டுமல்ல - எல்லோர்
உள்ளங்களிலும்தான்.
உயர்வான குணங்களால்
உயிர்வாழ்ந்த உத்தமரே!
உங்களை நினைவிற் கொள்ளும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''கூல்ட் ஹவுஸ்''
டச் றோட்,
உடுவில்.

([illegible])


**ஆனைவிழுந்தான்**
**ஸ்ரீ விக்கின விநாயகர் ஆலயம்**
**இளவாலை**

1992 ஆம் ஆண்டு முதல் நாட்டு நிலைமை காரணமாகத் தடைப்பட்டிருந்த ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் ஆலய பூஜை மீண்டும் ஈசுர வருஷம் ஐப்பசி மாதம் 3ஆம நாள் (**20 . 10 . 1997**) திங்கட்கிழமை பிராயச்சித்த அபிஷேகத்துடன் நித்திய பூஜை ஆலய பிரதம குரு இராம. பாலச்சந்திரக்குருக்களால் ஆரம்பித்து வைக்கப்படும். தொடர்ந்து நித்திய பூஜை நடைபெறும் என்பதை விநாயகப் பெருமான் அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

**இராம. பாலச்சந்திரக் குருக்கள்,**
பிரதமகுரு,
ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் ஆலயம்.

[50222]



**MODERN EDUCATION CENTRE**
**POINTPEDRO**

**A/L 97 ஆம் வருட மீட்டல் வகுப்புகள்**

**கலை - வர்த்தகம்**

ஆரம்பம்: 05 - 10 - 97 ஞாயிறு

எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகளுக்கான பயிற்சி வகுப்புகள் 04 - 10 - 97 இல் ஆரம்பம். விவரங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-1669) — நிர்வாகி


நல்லூர்

**மகா விஷ்ணு ஆலயத்தின்**

**கட்டட நிதிக்கான அதிர்ஷ்ட இலாப சீட்டின்**

பரிசில்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதோரின் இலக்கங்கள் வருமாறு:-

1 ஆம் பரிசுக்கான இல. - 09426
2 ஆம் பரிசுக்கான இல. - 09203
4 ஆம் பரிசுக்கான இல. - 03940

மற்றும் ஆறுதல் பரிசுகளுக்கான இலக்கம்:

**06551, 03980**

இப் பரிசுப் பொருள்களை 05 - 10 - 97 இற்கு முன்னர் வந்து பெற்றுக் கொள்ளவும். தவறின் வழங்கப்பட மாட்டாது என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்

இல. 157, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(50221)


**MATHS CENTRE**

M. M. V. Road, Nelliady

**98 DAY CLASS**

(97இல் பரீட்சை எடுத்தவர்களுக்கு)

**கலை, வர்த்தகப் பிரிவுகள்**

★ பொருளியல் — திரு. அன்ரனி
★ அளவையியல் — திரு. பிரபானந்தன்
★ தமிழ் — திரு. கமலரூபம்
★ இந்துநாகரிகம் — செல்வி மாதினி
★ இந்து சமயம் — திரு. நவம்
★ கணக்கீடு — திரு. பிரபாகரன்
★ வணிகக்கல்வி — திரு. உதயமோகன்
★ வணிகபுள்ளி விவரவியல் — திரு. திரிகரன்

(கரவெட்டி கோட்டத்தில் எமது நிறுவனத்தில் மட்டும் போதிப்பார்கள்)

**விஞ்ஞானப்பிரிவு**

★ பௌதிகவியல் — திரு. குகநேசன்
★ இரசாயனம் — திரு. ராகவன்
★ தூய கணிதம்
★ பிரயோககணிதம் ] — திரு. கண்ணன்

ஆரம்பம் : **03 - 10 - 1997** வெள்ளி A. M. 9. 00

**விஞ்ஞானப் பிரிவு**

A. M — 11.30 — பௌதிகம்

**கலை, வர்த்தகம்**

A.M 09.00 — பொருளியல்
A. M 10.00 — அளவையியல்

ஏனைய நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(50223) -நிர்வாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கல்லூர் வீ... (stamp)

# உதயன்

## செக்கு மாட்டின் நிலையா?

தமிழர்களுக்குச் சேரவேண்டிய நியாயமான உரிமைகளையேனும் வழங்கலாமா என்பது குறித்துத் தெற்கில் அரசியற் போர் உருவாகி விட்டதாக இப்பத்தியில் இரண்டு நாள்களுக்கு முன்னர் தான் குறிப்பிட்டிருந்தோம்.

சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை குறித்து அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்ட கருத்து அரசியற் போரை ஆரம்பித்து வைத்தது.

அதனால் வெகுண்டு, திரண்டு எழுந்த பௌத்த பிக்குமார், மகாசங்கத்திடம் அமைச்சர் மன்னிப்புக்கேட்க வேண்டும் என்று கோரி செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்,

இந்த உண்ணாவிரதத்தில் பௌத்த குருமார் மட்டுமன்றி, அரசியல் தலைவர்களும். அவர்களின் ஆதரவாளர்களும் பங்கு பற்றி உள்ளனர். பௌத்த குருமாரைவிட அடுத்தவர்கள் இரண்டு மடங்கினர்.

அமைச்சர் சமரவீரவுக்கு எதிரான உண்ணாவிரத நிகழ்வு அரசின் அதிகாரப் பரவல் தீர்வுத் திட்டத்துக்கு எதிரான கூட்டமாக மாறியிருக்கிறது. தீர்வு யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய அடுத்த நாள் அதற்கு எதிரான நிகழ்வு ஒன்று அரங்கேறி இருக்கிறது.

தீர்வுப் பொதியை முன்னெடுப்பதில் அரசு தெற்கில் பல தடை தாண்டிக் கம்பங்களுக்கு மேலே பாய்ந்து செல்ல நேரிடும் என்பதற்கான ஓர் அறிகுறியாக இதனைக் கொள்ளலாம்.

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட்டால் அது சிங்கள மக்களுக்குக் கெடுதலாகி விடும், உரிமைகள் பறிபோய்விடும் என்ற கருத்தைக் கொண்டுள்ளவர்கள், தீர்வுப் பொதிக்கு எதிராக தென்னிலங்கை மக்களை திசை திருப்புவதற்கு தளம் அமைத்துக் கொண்டார்கள் என்பதும் இதிலிருந்து வெளிச்சமாகிறது.

சுதந்திரத்தின் பின்னர் அரசியல் ரீதியாக மட்டுமன்றி சகல வகைகளிலும் அடக்கி, ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு என்னென்ன உரிமைகளை வழங்குவதற்கு சிங்கள மக்கள் உளங் கொண்டுள்ளார்கள், தயாராக உள்ளனர் என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியாது.

அரசை அமைத்துள்ள கட்சி என்ற வகையில், சிங்கள மக்களில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்ற கட்சி என்ற வகையில், அம்மக்கள் சார்பில் இவை இவற்றைத்தான் தமிழர்களுக்கு வழங்கப்போகிறோம் என்று முடிவு செய்வதற்கு ஆளுங்கட்சிக்கு உரிமை உண்டு. அதிகாரம் உண்டு.

எனினும் பிரதான எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பும், ஒத்தாசையும் கிடையாததால் ஆளுங்கட்சியினால் தனது முடிவை நடைமுறைப்படுத்த முடிவதில்லை. பண்டா - செல்வா ஒப்பந்தம் தொட்டு ராஜீவ் — ஜே. ஆர். ஒப்பந்தம் வரை இதுவே மீண்டும் மீண்டும் வரலாறாகி இருக்கிறது.

இப்போதும் அப்படி ஒரு கட்டமே உருவெடுத்து வருகின்றது. லியம்பொக்ஸின் முயற்சியால் ரணிலும் சந்திரிகாவும் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரே அணியில் செயற்படுவதற்கு இணங்கப்பட்டது. ஆனால் அது செயலாகவில்லை. எதிரும் புதிருமாகிவிட்டது.

செக்கில் கட்டிய மாடு எத்தனை தடவைகள், எவ்வளவு நேரம் சுற்றினாலும் வட்டத்தின் ஆரையிலிருந்து அரை அங்குலமும் முன்னே தள்ளிப் போக முடிவதில்லை. இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியும் அப்படியே ஆகிவிடுமா? கூடவே கூடாது.

---

அம்பாறை சென்றல் முகாம்:

# சிங்களவர்கள் வாழும் கிராமங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது!

## புலிகள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பு, ஒக். 2

அம்பாறை சென்றல்முகாம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கள மக்கள் வாழும் ரஜமக 3 ஆம் கொலனி, 19 ஆவது கொலனி மற்றும் சுகத கிராமம் என்பவற்றுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் 4 ஆம் கொலனியில் தமிழர்களின் வீடுகள் தீ வைக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து புலிகள் சிங்களவர்கள் வாழும் கொலனிகளில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு வருகிறார்கள் என்று தகவல் கிடைத்துள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தமது கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி சிங்கள மக்கள் அம்பாறைப் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

இதன் பின்னரே பொலீஸார் இந்தக் கிராமங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்தினர்.

[இ-3]

## விழிப்புலன் இழந்த மாணவர் பெறுபேறு இன்னும் கிடைக்கவில்லை

1996 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய விழிப்புலன்இழந்த இரு மாணவர்களது இரு பாடங்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் கிடைக்கவில்லை.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய இந்த இருமாணவர்களினதும் பெறுபேறுகள் உரிய காலத்தில் அவர்களுக்குக் கிடைக்காமல் இருந்தது. பாடசாலை நிர்வாகத்தினர் மேற்கொண்ட முயற்சியால் கடந்த 23 ஆம் திகதி அவர்களின் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றன.

எனினும் கணிதம், இந்து சமயம் ஆகிய பாடங்களுக்கான பெறுபேறுகள் இன்னும் கிடைக்கவில்லை.

(இ-9)

## நாற்றுமேடை

வடமராட்சி, ஒக். 2

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கைக்கான நாற்று மேடைகளை அமைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

(இ-173)

---

## பெண்பொலீஸ் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 2

தற்செயலாக இடம்பெற்ற துப்பாக்கிவெடிச் சம்பவம் ஒன்றில் பெண் பொலீஸார் ஒருவர் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்வி பி. சாமந்தி (வயது 25) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ-15)

## தபாற்பெட்டி இல்லை

நெல்லியடி, ஒக். 2

வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பகுதியில், அமைக்கப்பட்டிருந்த தபாற்பெட்டி கடந்த சில வருடங்களாக அவ்விடத்தில் இல்லை. இதனால், தபால்களை அனுப்புவதற்காக அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பல மைல் தூரம் அலையும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. (இ-109)

---

## நாளை
### புரட்டாதி 17

வெள்ளிக்கிழமை
திதி: துதியை
பின் இரவு 1.43 வரை
நட்சத்திரம்: சித்திரை
முன் இரவு 6.22 வரை.
சுபநேரம்: 6.02-7.32
ராகுகாலம்: 10.32-12.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

# சக்தியைப் பக்தி செய்து முக்திக்கு வழி தேடுவோம்

சித்திரைப் பூரணைப் பக்கச் சுக்கிரவாரம்
பயில்வார் தீமை தீர்த்து
முத்தி தரும் ஐப்பசி உத்தரத்தோடு மாநவமி
இவை மூன்றும் பச்சைத்
தத்தை மொழி உமை விரதம்

— உபதேச காண்டம்.

சித்திரை மாதத்துப் பூர்வ பட்சச் சுக்கிர வாரமும், அனுட்டிப்போரது பாவத்தைப் போக்கி வீடு பேற்றை அருளுகின்ற ஐப்பசி மாத உத்தர நட்சத்திரமும், மாநவமி ஆகிய இம் மூன்றும் பசிய நிறமும் கிளி போன்ற வசனமும் உடைய உமாதேவியாரது விரதங்களாகும்.

இவற்றுள் சிறந்தது மகா நவமி. சக்தியைக் குறித்து ஒன்பது நாள்கள் அனுட்டிக்கப்படுகிறது நவராத்திரி விரதம். இது இரு வகைப்படும்.

ஒன்று வசந்தருது. சித்திரை மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி வரை ஒன்பது நாள்கள் கொண்டது. இது வசந்த நவராத்திரி எனப்படும். சிலாபத்தில் உள்ள முன்னேஸ்வரம் ஆலயத்தில் இது சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

### இன்று நவராத்திரி ஆரம்பம்

மற்றதுசரத்ருது. புரட்டாதி மாதம் வளர்பிறைபிரதமை முதல் நவமி வரையுள்ள ஒன்பது நாள்களைக்கொண்டது. இது சாரதா நவராத்திரி எனப்படும். எல்லா அம்மன் ஆலயங்களிலும் இது கொண்டாடப்படுகின்றது. மைசூரில், வட இந்தியாவில் இது பத்து நாள்கள் கொண்டாடப்படுவதால் தசரா என வழங்கப்படுகின்றது.

இவ் விரதம் நவமியுடன் முடிவடைவதால், மகாநவமி தேவிபூசை என்றும் மூன்று சக்தி வடிவங்களுக்கு நடைபெறுவதால் துர்க்கா, இலட்சுமி, சரஸ்வதிபூசை என்றும், சரஸ்வதி பூசையுடன் முடிவுறுவதால் சரஸ்வதி பூஜை என்றும் கடைசி நாளில் ஆயுதங்களை வைத்துப் பூசிப்பதால் ஆயுத பூஜை என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நவமியை இதனை மாநம்பு என்பர். மகா நோன்பு என்பதன் திரிபே மாநம்பு ஆகும். பத்தாம் நாள் விஜயதசமி எனப்படும். வன்னி மரப்பொந்தில் மறைத்து வைத்த ஆயுதங்களை விஜயன் மீண்டும் பெற்றுக் கொண்டது இத் தினத்திலாகும்.

விஜயதசமி ஒரு வெற்றித் திருநாள். இதனால் புதிய காரியங்களை இத்தினத்தில் தொடங்குகின்றோம். முக்கியமாக வித்தியாரம்பம் குறிப்பிடத்தக்கது.



சக்தியைக் குறித்து ஒன்பது நாள்கள் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுவதால் சக்தியின் பெருமை விளங்கும். சக்தியின்றி சிவனுக்கே இயக்கமில்லை. சகலதும் சக்திமயம். ''எங்கெங்கு காணினும் சக்தியடி'' என்று பாடினார் பாரதியார். இதனால் தான் சிவனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி; சக்திக்கு ஒன்பது ராத்திரி நவராத்திரி என அனுட்டிக்கப்படுகின்றது.

அசைவறு மனத்தை அடையப் பெறச் சக்தியை முதல் மூன்று நாள்களிலும் துர்க்கையாகத் துதிக்கின்றோம். பொருளையும் நிதிக் குவையையும் வேண்டி நடு மூன்று நாள்களிலும் சக்தியை இலட்சுமிதேவி என்று இறைஞ்சுகின்றோம். துறை தோய்ந்த கல்வியை நிறைவாகப் பெறுவதற்கு சக்தியை இறுதி மூன்று நாள்களிலும் சரஸ்வதி தேவியாகத் துதி செய்கின்றோம்.

மனோதிடம், வற்றாத நிதியம், அறிவு, ஞானம் இவற்றை அருள்பவள் அன்னை அபிராமி; உபகரிப்புகளை வழங்கும் அன்னை ஸ்ரீமாதா என்று சிறப்பிக்கப் படுகிறாள். பொன்னையும் பொருளையும் போகத்தையும் வேண்டினாலும் அன்னையின் அருள் பெறுதலே இறுதி நோக்கமாக இருக்க வேண்டும்.

அம்பிகைக்கு மகிஷாசுர மர்த்தனி என்ற ஒரு பெயரும் உளது. மகிடாசுரனை வதம் செய்தமையால் இப் பெயர் ஏற்பட்டது. மடமை, அறியாமை, அஞ்ஞானம் ஆகியவற்றை அகற்றி ஞானத்தை அருள்பவள் அன்னை அபிராமி.

தடையின்றி விளங்கும் அன்னையின் அருட் கொடையை அழகுற அருளியுள்ளார் அபிராமிப்பட்டர். பதினாறு பேறருளும் பராபரையை துதி செய்வதனால் எமது கதி மாறி அதி உத்தம வாழ்வில் திளைக்கலாம்.

வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே என்று வல்லவாம்பிகையை வாழ்த்துவோம்!

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழிபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாதகோலு மொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்புமுதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயில் கொள் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள் வாமி அபிராமியே!

— வாசுகி சிவராமலிங்கம்

---

## சாயி சிந்தனை

சில ஆசாமிகள் இருக்கிறார்கள் தாங்கள் தண்ணீரிலே நடப்பதாகவும், காற்றிலே சஞ்சரிப்பதாகவும் ஜம்பம் அடித்து, மற்றவர்களாலும் அது முடியுமா என்று சவால் விடுகிறார்கள். ஒருத்தர் பொறாமை, கர்வம், பேராசை, குரோதம் ஆகியவற்றிலிருந்து விடுபட முடிந்தால் அதுவே மிகப் பெரியதான மகா பிரயோசனமான சாதனையாகும். அவர்களுடைய நடத்தையைப் பார்க்கும் போது அக்குணக்கேடுகளைக் கைவிடுவது மிகக் கடினமானதாகத் தெரிகிறது.

தனது சுபாவமான தெய்வீக நிலையை எய்தியுள்ளவருக்கு இதனால் அசைவில்லை. அனைத்திலும் மேலான பேரானந்தப் பெருநிலையை இராமகிருஷ்ணர் நாடியபோது அவருடைய இஷ்ட தெய்வமான காளி மாதாவை மறக்க வேண்டும் என்றார் தோதாபுரி. காளி மாதாவின் நாமத்திலும் ரூபத்திலும் இராமகிருஷ்ணருக்கு இருந்த மிக ஆழ்ந்த பற்றைக் கடந்து செல்வதற்கு தோதாபுரி உதவி புரிந்தார்.

ஆகையால் இந்நாளிலுள்ள யோகிகளும், ரிஷிகளும் வெறுமனே நாமத்திலும், புகழிலும் வைத்துள்ள பற்றை என்னவென்று சொல்வது? ஒரு விரலை அசைக்கிறார்களில்லை. ஓர் ஆசையையாவது பழக்கத்தையாவது கைவிடமாட்டார்கள். ஒருநேர உணவைத் தவறவிடார்கள். ஒருமணி நேரம் அமைதி பூண்டு அமர்ந்து இருக்கமாட்டார்கள். ஆனால் இறைவன் தங்களுக்கு அமரத்துவம் அருள வேண்டும் என்றும், மனிதர்கள் தங்களை உதாரணமாகக் கொள்ள வேண்டும் என்றும் எதிர் பார்க்கிறார்கள்.

- பாபா.

(ஆதாரம்: Sathya Sai Speaks - Vol: V)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். எஸ் எவ். அதிகாரிகள் குழு மந்திகை ஆஸ்பத்திரிக்கு விஜயம்

நெல்லியடி, ஒக். 2

பிரெஞ்சு மருத்துவக் குழுவின் அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் மந்திகை ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தது.

மந்திகை ஆஸ்பத்திரியில் பிரெஞ்சு மருத்துவரின் சேவை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியின் நிலைமையை நேரில் கண்டறிவதற்காக இக் குழுவினர் கொழும்பில் இருந்து இங்கு வந்துள்ளனர்.

பாரிஸ் நகரில் உள்ள எம். எஸ். எவ். தலைமையக அதிகாரிகளுடன் கொழும்பிலுள்ள தலைமையக பிரதான இணைப்பு அதிகாரியும், யாழ்ப்பாணத்திலுள்ள தொடர்பு அதிகாரியும் அங்கு வருகைதந்தனர்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை சகிதம் வைத்தியசாலையின் வார்ட் பகுதிகளுக்கும், சத்திரசிகிச்சைப் பிரிவுக்கும் சென்று குழுவினர் அங்குள்ள குறைபாடுகளைக் கேட்டறிந்தனர்.

ஆண்கள், பெண்கள் வார்ட் பகுதிக்குச் சென்ற இவர்களை இருகரம் கூப்பி வரவேற்ற நோயாளர்கள் ''உங்கள் மருத்துவ சேவையே எமக்குத்தேவை'' என்று வேண்டுகோள் விடுத்தனர். (ஐ-109)

## கார் விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 2

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் ஒன்று நேற்றுக் காலை உடப்புப் பகுதியில் தடம் புரண்டதில் ஒருவர் உயிரிழந்தார்; மூவர் காயமடைந்தனர்.

மன்னார் வர்த்தகரான சின்னராசா (வயது 80) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

காரை ஓட்டிச் சென்ற வர்த்தகரான இவரது மகன் ரட்ணகுமார் கையில் ஏற்பட்ட காயத்துடனும், இவரது மனைவியான சின்னராசா சௌந்தரி (வயது 62), இவரது மகளான பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவி சின்னராசா மகாலட்சுமி (வயது 24) ஆகியோர் சிறுகாயங்களுடனும் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (இ-3)

# அலரி மாளிகைக்குள் நுழைய முயன்றாராம்

கொழும்பு அலரிமாளிகைக்குள் அனுமதியின்றி நுழைய முயன்றதாகக் கூறப்படும் இரத்மலானை வாசி ஒருவர் நேற்று கொழும்பு மேல்நீதிமன்ற நீதிவான் ஷிரானி திலகவர்த்தன முன் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை 15 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரின் கைவிரல் அடையாளமும் பதிவு செய்யப்பட்டது. (இ-3)

## மன்னார் கொழும்பு பஸ் சேவை

மன்னார் ஒக். 2

மன்னார்-கொழும்பு நேரடி பஸ் சேவை நேற்று ஆரம்பமானது.

மன்னாரில் இருந்து கொழும்பு வருவோர் நலன் கருதி இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-21-3)

## விவரங்களை அனுப்புமாறு கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் இருந்து விளையாட்டு உத்தியோகத்தர் நியமனத்துக்கு விண்ணப்பித்து, எழுத்துப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு, செய்முறைப் பரீட்சைக்கு செல்ல முடியாது போனவர்கள் தமது பரீட்சை இலக்கம், பெயர், விலாசம் ஆகிய விவரங்களை ''யாழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடன் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆசை செல்லம்மா

திருமதி ஆசைசெல்லம்மா அவர்கள் 01 - 10 - 97 புதன்கிழமை காலமானார். அன்னார் ஓவியர் ஆ. இராசையாவின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஆ. இராசையா
(ஓவியர், மகன்)

சரஸ்வதி வித்தியாசாலை ஒழுங்கை,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (50218)

## சின்னத்துரை இராசம்மா

தையிட்டி கேசரி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை இராசம்மா 1-10-97 புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் சற்குணசீலன் (லண்டன்), சந்திரகாந்தமலர், பத்மநாதன், குணசிங்கம் (சிவில் என்ஜினியர்—டோகா), சத்தியானந்தமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சகுந்தலாதேவி (டாக்டர்—லண்டன்), திருமால (தொழில்நுட்ப உத்தியோகத்தர்— கொழும்பு), இராசமலர், பதுமநிதி (டாக்டர்—டோகா), நாகராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனஞ்சேயன் (லண்டன்), ஜீவராஜ்), ஜீவகன், சுசீந்திரா, பிரியங்கா (சுவிஸ்), விதகன் (சுவிஸ்), மதுசூதன் (டோகா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உயரப்புலம் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள இல்லத்தில் 2-10-97 வியாழக்கிழமை இன்று பி.ப. 2.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரயாம்பட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பத்மநாதன் (மகன்)
தி. சந்திரகாந்தமலர் (மகள்)

தற்காலிக முகவரி:-
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(பிள்ளையார் கோயில் அருகில்) (49802)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சுமனையில் 02 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

சிங்கள ஆணைக்குழு:

# நன்கு ஆராய்ந்த பின்பே அறிக்கை விடுத்ததாக சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 2

சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையை தான் நன்றாக ஆராய்ந்தபின்னரே அறிக்கை விடுத்ததாகவும் —

ஆணைக்குழுவின் அறிக்கையினால் ஏற்படக்கூடிய அரசியல் அம்சங்கள் பற்றி கவனம் செலுத்தியதாகவும் —

தகவற்றுறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையைப் பற்றிகருத்துக்களை தெரிவிப்பதன் மூலம் மகாசங்கத்தினருக்கு அவமதிப்பை ஏற்படுத்துவதோ அவர்களை அகௌரவப்படுத்துவதோ தமது நோக்கம் அல்ல என்றும் அமைச்சர் கூறினார்.

தமது அறிக்கை காரணமாக மகாசங்கத்தினரின் மனம் புண்பட்டிருந்தால் அதற்காக தாம் மனப்பூர்வமாக வருந்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை பாரபட்சமானது. இந்த இடைக்கால அறிக்கை யுத்தத்தை நிறுத்துவதற்காகவும், சமாதானத்தைக் கொண்டு வருவதற்காகவும் ஜனாதிபதியின் வழிகாட்டலில் முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய அரசமைப்புத் திட்டத்தை கண்டிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்றும் அமைச்சர் சொன்னார்.

இந்த இடைக்கால அறிக்கையில் சிங்கள சமூகம் எதிர்நோக்கியுள்ள எந்த வித குறைபாடுகளும் குறிப்பிடப்படவில்லை என்று மகாசங்கத்தினருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (இ-3)

## லண்டனில் ..

(முதலாம் பக்கத் தொடர்)

கில் ஐக்கிய ராஜ்யத்தில் பல பாகங்களில் வாழ்ந்து வரும் ஈழ மக்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஸ்கொட்லாந்து நாட்டின் தலைநகர் எடின்பேர்க்குக்கு புரட்சிப் பயணம் ஒன்றை மேற்கொள்கிறார்கள்.

பயணத்தில் பங்கேற்பதற்கு லண்டனில் இருந்து புறப்படும் 600 க்கு மேற்பட்ட தமிழ்மக்கள் 'தமிழீழ-ஸ்கொட்லாந்து நட்புறவு ரயில்'' என்ற பெயர் தாங்கிய தனிப்பட்ட ரயில் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு பல இடங்களில் இருந்தும் எடின்பேர்க்கில் உள்ள ரயில் நிலையத்தை வந்தடையும் மக்கள் அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்டு வேவொலி வணிக நிலையத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தமிழீழ முகாமை வந்தடைவார்கள்.

அங்கு பிற்பகல் 12. 30க்கு தமிழ்க் கலாசார விழா ஆரம்பமாகும்.

இதே தினம் பொதுநலவாய நாடுகளின் மாநாடு எடின்பேர்க் நகரில் நடைபெறுகிறது.

அந்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பங்குபற்றுகின்றார்.

பொதுநலவாய நாட்டுத் தலைவர்களை தமிழீழ மக்கள் சந்தித்து, தமிழீழத்தில் நடத்தப்படும் இனப்படுகொலையை அவர்களின் கவனத்துக்கு கொண்டு வருவார்கள்—

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நேட்டுங்கு இளைஞன் பலி

வவுனியா வசந்தி தியேட்டருக்கு முன்பாக இனந்தெரியாதவர்களால் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

சஜீந்திரன் சதீஸ்குமார் (27 வயது) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இவர் ரெலோ அமைப்பில் முன்னர் இருந்தார் என தெரிவிக்கப்பட்டது. (இ-3-21-164)

## இழப்புக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த மோதலில் 38 படையினர் உயிரிழந்ததாகவும் விடுதலைப் புலிகளின் 14 சடலங்களைப் படையினர் கைப்பற்றியதாகவும் வவுனியா சுயாதீனத் தகவல் தெரிவித்தது.

இந்த மோதலில் படையினர் தரப்பில் 27 பேர் உயிரிழந்தனர் எனவும், 200 படையினர் காயமடைந்ததாகவும் —

புலிகள் தரப்பில் 50 பேர் உயிரிழந்தனர் எனவும், 250 பேர் காயமடைந்தனர் எனவும் — நேற்றிரவு லக்ஹண்ட வானொலி தெரிவித்தது.

இதேவேளை — தமது தரப்பில் 11 பேர் களப்பலியானதாகவும், படையினரின் 14 சடலங்களைக் கைப்பற்றியதாகவும் — புலிகளின் குரல் தெரிவித்தது. (இ-21-164-3)

## புளியங்குளத் ...

(முதலாம் பக்கத் தொடர்)

உள்ளனர் என்றும் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (இ-3-164-21)

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்)

தோம்.

மூன்று கட்டங்களாக விவரம் வெளியிடப்பட்டவர்களின்— குறிப்பாக 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் அதற்கு முன்னரும் விடுதலை செய்யப்பட்டவர்களின்— பெயர்களை ஒன்று திரட்டியே 176 பேர்கள் அடங்கிய பட்டியலை வெளியிட்டுள்ளனர்.

காங்கேசன்துறை, அநுராதபுரம் நீதிமன்றங்களாலும், பலாலியாலும் விவரம் அறிவிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் பெயர்களே அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இதுவரை கைதாகி தகவலற்றோர் ஒருவரது பெயர் கூட எமது சங்கம் வெளியிட்டுள்ள பெயர்ப்பட்டியலில் இடம்பெறவில்லை என்பதை ஆணித்தரமாகக் கூறுவதுடன் பாதுகாப்பு அமைச்சு விசாரணைக் குழுவின் அறிக்கை தமது பிள்ளைகளை தேடும் பெற்றோருக்கு, கணவன்மார்களைத் தேடி அலையும் மனைவிமாருக்கு ஒரு வெறும் கண்துடைப்புச் செயலாகும்.

எனவே இது விடயமான உண்மையான தகவலை பாதுகாப்பு அமைச்சு வெளியிடவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

பாதுகாப்பு அமைச்சு விசாரணைக்குழுவின் பட்டியலை ஆவலாக எதிர்பார்த்திருந்த உறவினருக்கு இது பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

மேற்படி விடயமாக அரசாங்க அதிபர், இராணுவக் கட்டளைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது—

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பிணையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

உடுப்பிட்டி, கம்பர் மலையைச் சேர்ந்த தவராசா முரளிதாஸ் என்ற குடும்பஸ்தர் 25 - 09 - 1996 இல் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்

அவரது சடலம் அப்பகுதி இராணுவ முகாமுக்கு அருகில் புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட பகுதியில் இருந்த புதைகுழியை தோண்டிய போது சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை. சடலம் புதைத்ததற்கான அடையாளங்கள் அங்கு காணப்பட்டன.

இதையடுத்து விசாரணை மேற்கொண்ட பருத்தித்துறை பொலீஸார் இரு சிப்பாய்களை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

யாழ். நீதிவானின் பணிப்பின் பேரில் இந்த வழக்கு கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

அங்கு இவ்விரு சிப்பாய்களுக்கும் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இவர்களில் ஒருவரான சுதுபண்டா குமார என்ற சிப்பாய் பிணையில் விடப்பட்டிருந்த சமயம் தப்பிஓடிய படையினருக்கு மன்னிப்பு அளித்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் இராணுவத்தில் இணைந்து கொண்டார்.

எனினும் இவர் வரணிப்பகுதிக்கு சேவைக்கு அனுப்பப்பட்டார்.

அண்மையில் இந்த சிப்பாயை அடையாளம் கண்ட வடமராட்சி இராணுவ அதிகாரி இவரைக் கைது செய்ய பொலீஸாருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இந்தச் சிப்பாய் யாழ். நீதிமன்றத்தில் கடந்த 24 ஆம் திகதி ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org